# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP.30/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 15-11-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Keshav Mishra | Village | : |
| Father's Name | : Puppukumar Mishra | Taluk | : |
| Age | : | Calling | : |

பிரமாண பத்திரத்தின் தொடர்ச்சியாக முதல் விசாரணை

நான் மனுவின் மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 13 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, ம.த.சா.1 முதல் 13 வரை ஆகும். நான் இந்த வழக்கில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சம்பவ தினத்தன்று பைக்கில் சென்று கொண்டிருந்த போது என் மீது ஸ்கார்பியோ கார் இடித்து எனக்கு அடிப்பட்டது. ம.த,சா.2 வில் லாரி இரண்டு சக்கர வாகனத்தில் இடித்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விவரத்தை நான் மருத்துவரிடம் சொல்லவில்லை. என்னை மருத்துவ மனையில் சேர்த்த நபர் அவ்வாறு கூறியிருக்கலாம். நான் தான் மோட்டார் சைக்கிளை ஸ்கார்பியோ காரின் மீது மோதி ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விபத்து நடக்க எனது கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்துக்கு பின்னர் நான் Be Well மருத்துவ மனையில் 6-7 நாட்கள் உள்நோளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். நான் தற்போது மருத்துவ சிகிச்சை எடுத்து வருகிறேன் என்பதை காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஓட்டி சென்ற இரண்டு சக்கர வாகனம் எனது நண்பருக்கு சொந்தமானது. என் மீது கவனக்குறைவு இருந்தது என்பதை மறைப்பதற்காக தான் நான் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் கல்லூரியில் படித்து கொண்டிருந்தேன். விபத்தின் போது எனது வயது 20. அதை காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்திற்கு பின்னர் எனது படிப்பு பாதிக்கப்பட்டது என்பதை காண்பிக்க எந்த

ஆவணமும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் என்னால் நடக்க முடியவில்லை என்று நிற்க முடியவில்லை என்று  பொய்யாக சொல்லியுள்ளேன் என்றும் அதிக இழப்பீடு பெறுவதற்காக தான் அவ்வாறு நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவினால் தான் ஏற்பட்டது ஆதலால் இரண்டாம் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்தவித இழப்பீடும் கொடுக்கக் கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. இழப்பீடு  பெறுவதற்காக நான் இந்த நீதிமன்றம் தவிர வேறு ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(முதலாம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டு கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)